# CHALLENGES IN ENHANCING THE SKILLS OF ARABIC LANGUAGE AMONG THE UNIVERSITY STUDENTS: (THE RESEARCH BASED ON THE STUDENTS WHO WERE SELECTED FROM THE GOVERNMENT SCHOOLS TO THE FACULTY OF ARABIC LANGUAGE OF SOUTH EASTERN UNIVERSITY OF SRI-LANKA)

**Mrs.M.S.F Ilma (1), Ms.M.F. Hudaifa[2], MS.M.A Sameera[3], MS.M.P.F Fasrina[4]**

[1 & 2] Assistant Lecturer of Department of Arabic Language, FIA, SEUSL

[3 & 4] Undergraduate, Department of Arabic Language, FIA, SEUSL

zeenafathi13@gmail.com , rawlahuzaifa@gmail.com,

sameeraakram1996@gmail.com, fasrina96@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அரபு மொழியானது உலகில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மொழியாகும். பல நாடுகளில் இது இரண்டாம் மொழியாக காணப்படுவதுடன், இலங்கையில் அரபு மொழி அரச பாடசாலைளிலும், பல்கலைக்கழகங்களிலும், மதராஸாக்களிலும் கற்பிக்கப்படும் ஒரு மொழியாக காணப்படுகிறது. குறிப்பாக இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தில் அரபு மொழித்துறைக்கான தனியான பீடம் உள்ளது. இப்பீடத்திற்கு வருடந்தோறும் சுமார் 200 ற்கு மேற்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் மாணவர்களில் அரச பாடசாலைகளில் அரபு மொழியை பாடமாக கற்ற மாணவர்களும் கனிசமான அளவு உள்வாங்கப்படுகின்றனர். அரச பாடசாலைகளில் இருந்து தெரிவு செய ்யப்படும் மாணவர்கள் அரபு மொழியை, இப்பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டாலும் அவர்கள் அரபு மொழியை சரளமாக பேசுவதில் பாரிய பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர்கொள்கின்றனர். எனவே அரபு மொழிப்பேச்சுத்திறனில் அரச பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அதற்கான தீர்வுகளையும் கண்டறிவதாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது.

**திறவுச் சொல்:** அறபு மொழி, அரச பாடசாலை மாணவர்கள், அறபு பேச்சுத் திறன்

## அறிமுகம்

அரபு மொழி செமிட்டிக் மொழிக் குடும்பத்தின் மிகப் பெரிய மொழியாக காணப்படுகிறது. அறமைக் மொழி, ஹீப்ரு மொழி, அம்காரியம், திரிகுஷா ஆகியவற்றுடன் தொடர்புடையது. உலகில் வாழும் 160 கோடி முஸ்லிம்களில் 225 மில்லியன் மக்கள் அரபு மொழியை தாய் மொழியாகப் பேசுகின்றனர். ஆசியா , தென் ஆபிரிக்கா கண்டங்களில் ஏறக்குறைய 35 நாடுகளில் அரபு மொழி அரச கரும மொழியாக உள்ளது. 1973 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அலுவலக மொழியாக அங்கிகரிக்கப்பட்ட ஆறு மொழிகளில் அரபு

மொழியும் ஒன்றாகும். இவ்வகையில், டிசம்பர் 18 ஆம் திகதி உலக அரபு மொழி தினமாக கொண்டாடப்படுகின்றது.[15]

இன்றைய காலத்தில் அதிகமான மக்களால் பேசப்படும், எழுதப்படும் , ஆய்வுகளை மேற்கொள்ளும், மொழிபெயர்க்கப்படும் மொழிகளில் அரபு மொழி முக்கியமான ஒரு மொழியாக விளங்குகின்றது. உலகளவில் பயன்படுத்தப்படும் மொழியான அரபு மொழி மதரீதியாகவும் மதிக்கப்படுகின்றது.

இஸ்லாமிய சமயத்துடன் தொடர்பு பட்டதாகையால் உலகெங்குமுள்ள முஸ்லிம்களால் கற்கப்படுகின்றது. இது வலமிருந்து எழுதப்படுகின்ற விஷேட மொழியாக காணப்படுகின்றது. அல்ஜீரியா, பஹ்ரைன், எகிப்து, எரித்திரியா, ஈராக், ஜோர்தான், குவைத், லெபனான், லிபியா, ஓமான், கட்டார், சவுதி அரேபியா, சூடான், சிரியா, யெமன் போன்ற நாடுகளில் பேசப்படுவதோடு அரசு ஏற்புடைய மொழியாகவும் உள்ளது. இன்று உலக வர்த்தகத்தில் பயன்படுகின்றது. உலக செம்மொழிகளில் சீன மொழிக்கு அடுத்த இடத்தில் உள்ள மொழி என்று பல பெருமைகள் கொண்ட அரபு மொழியானது குறிப்பாக இலங்கையில் அரச பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படும் ஒரு மொழியாக காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அரபு மொழிக்கென தனியார் பீடம் காணப்படுகின்றது. இப்பீடத்திற்கு வருடந்தோரும் அரச பாடசாலைகளிலிருந்தும், மதரஸாக்களிருந்தும் சுமார் 200 மேற்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதில் அரச பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அரபு மொழியை இப்பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டாலும் அரபு மொழியை சரளமாக பேசுவதில பாரிய பிரச்சினைகளையும் சவால்களையும் எதில்கொள்கின்றனர்.

எனவே இவ்வாய்வானது அரச பாடசாலைகளிருந்து தெரிவாகும் மாணவர்கள் அரபு மொழி பேசுவதில் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக ஆய்வு செய்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக அரபு மொழி பீடத்தில் அரச பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அரபு மொழியை சரளமாக பேசுவதில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

**ஆய்வு நோக்கம்**

1. அரபு மொழி பேச்சுத்திறனை வளர்த்துக்கொள்வதில் காணப்படும் பிரச்சினைகளை கண்டறிதல்.
2. அரபு மொழி பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதில் காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வு மற்றும் உபாயங்களை வழங்குதல்.
3. அரபு மொழி பேச்சுத்திறனை மாணவர்கள் மத்தியில் ஊக்குவித்தல்.

[15] محي الدين , حذيفة , (2017), دراسة تقابلية بين أصوات اللغتين "العربية والسنهالية". رسالة البكاليوريوس, ألوويل: جامعة جنوب شرق سريلانكا, ص.18

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்தி ஆய்வு முறைகளை மேற்கொண்டுள்ளது. முதல் நிலை தரவுகள் நேர்காணல், வினாக்கொத்து ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளன. தென்கிழக்கு பல்கலைக்கலைக்கழகத்தின் அறபு மொழி பீடத்திற்கு அரச பாடசாலைகளிலிருந்து தெரிவாகும் மாணவர்களின் அரபு மொழி பேச்சுத்திறனில் காணப்படும் பிரச்சினைகளை இணங்காண நோக்க மாதிரி நுட்ப முறையின் அடிப்படையில் (purpose sampling method) சுமார் 150 வினாக்கொத்தை அரச பாடசாலைகளிலிருந்து தெரிவாகும் மாணவர்களுக்கும் மற்றும் 10 விரிவுரையாளர்களிடமிருந்து நேர்காணல் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், அறபு மொழி தொடர்பான ஆய்வு கட்டுரைகள் என்பவற்றின் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக சேகரிக்கப்படும் தகவல்கள் Ms Excel மூலம் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**ஆய்வின் முக்கியத்துவம்**


கல்விச் சமுகமாய் விளங்கும் பல்கலைக்கழக மாணவர்களை மையப்படுத்தி அறபு பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதில் காணப்படும் சவால்கள் என்ன? என்பதனை அடையாளப்படுத்தி எதிர்க்கால சந்ததியனருக்கான சில வழிகாட்டல்களும் இவ்வாய்வில் உள்ளடக்கப்பட்டு இருப்பதால் இன்னும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

**கலந்துரையாடல்களும் பிரதான கண்டறிதலும்**

வளர்ந்து வரும் இன்றைய சமூகத்தில் மொழிப் பேச்சுத் திறன் இன்மையால் சமூகத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே இரண்டாம் மொழியாக காணப்படும் அரபு மொழிப் பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்வதில் காணப்படும் சவால்கள் மற்றும் அதற்குறிய தீர்வுகள் என்பன சீர்தூக்கி பார்க்க வேண்டிய ஓர் அம்சமாக காணப்படுகிறது.


மேற்படி எமது தலைப்பிற்கு மேலும் வலு சேர்க்கும் விதமாய் நாம் எமது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த் அரபு மொழி பீடத்தின் அரச பாடசாலைகளிருந்து தெரிவாகிய 2ஆம் 3ஆம் வருட மாணவர்களுல் 150 பேரை எழுமாறாக கொண்டு பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதன்படி பெறப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.........

ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் அரபு மொழியை ஒரு பாடமாக க.பொ.த சாதாரண தரத்திலிருந்து கற்றவர்களே அதிகம். இவர்கள் 100 க்கு 73% வீதமாக இருக்கின்றனர். இவர்களுக்கு அரபு மொழி பேச முடியாவிட்டாலும் ஓரளவு விளங்கிக் கொள்ள முடியுமாக காணப்படுகின்றது.





| விடைகள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| க.பொ.த சாதாரண தரம் | *110* | *73%* |
| க.பொ.த உயர் தரம் | *40* | *27%* |

பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அரபு மொழியை ஓரளவு பேச முடியுமானவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் கற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் 10% வீதமாகவும் குறைவாக 50% வீதமாகவும் காணப்படுகின்றனர். மேலும் அரபு மொழி பேச முடியாதவர்கள் 100 க்கு 40% வீதமானவர்கள் காணப்படுகின்றனர். மேலும் இவர்கள் அரபு வாசிக்க தெரியாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.





| விடைகள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| மிக நன்று | - | - |
| நன்று | - | - |
| பரவாயில்லை | *15* | *10%* |
| குறைவு | *75* | *50%* |
| முடியாது | *60* | *40%* |

மேலும் இதற்கு அப்பால் அரபு மொழி பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கான ஆர்வம் 100 க்கு 100% வீதமானவர்களிடம் காணப்படுகின்றது. இவர்கள் மேலும் முயற்சிகள் செய்தால் முன்னேற வாய்ப்புக்கள் உண்டு.





| விடைகள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| ஆம் | *150* | *100%* |
| இல்லை | - | - |

மேலும் தரவுகளின் படி விரிவுரையாளர்கள் அல்லது ஏனையோர் அரபு மொழி பேசுவது 100 க்கு 7% வீதமானவர்களுக்கு விளங்குகின்றது. இவர்கள் பெரும்பாலும் க.பொ.த சாதாரண தரத்திலிருந்து அரபு மொழியை கற்றவர்களாக காணப்படுகின்றனர்.





| விடைகள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| விளங்குகின்றது | *10* | *7%* |
| ஓரளவு விளங்குகின்றது | *120* | *80%* |
| விளங்கவில்லை | *20* | *13%* |

மேலும் பல்கலைக்கழகத்தில் அரபு பாடங்கள் 100 க்கு 67% வீதமாக அரபு மொழியிலே நடைபெறுகின்றன. இதன் மூலம் மாணவர்கள் பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்ள வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.




| விடைகள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| தமிழ் | *100* | *67%* |
| அரபு | *50* | *33%* |

இதைத்தவிர பேச்சுத்திறனை வளர்த்துக்கொள்வதற்காக புதிய சொற்கள் 100 க்கு 80% வீதமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.




| விடைகள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| ஆம் | *120* | *80%* |
| இல்லை | *30* | *20%* |

எனவே இவ்வாய்வின் படி க.பொ.த சாதாரண தரத்திலிருந்து அரபு மொழியை கற்றவர்களுக்கு அரபு பேச்சுத்திறன் ஓரளவு முடியுமாக காணப்படுகின்றது. க.பொ.த உயர்

தரத்திலிருந்து அரபு மொழியை கற்றவர்கள் பெரும்பாலும் அரபு பேச்சுத்திறனில் பின்தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே இதற்கு தென்கிழகிழக்கு பல்கலைக்கழகத்தில் அரபு மொழி பீடத்தில் அரபு பேச்சுத்திறனுக்கான தனியான பாடவிதானத்தை அமுல் செய்யாமை, மற்றும் மேலிடத்தில் அரபு பேச்சுத்திறனில் எந்தவொரு கரிசனையும் எடுக்காமை போன்றன பிரதான காரணிகளாக காணப்படுகின்றன.

**முடிவுரைகள்**

எனவே இன்றைய மாணவர்கள் குறிப்பாக அரபு மொழியை சரளமாக பேசுவதில் பாரிய பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்கின்றனர். அரபு பேச்சுத்திறனை ஒரு சவாலாக மாத்திரம் கருதாமல் சவாலை முறியடிக்கின்ற ஒரு சாதனமாக பார்ப்போமேயானால் அரபு பேச்சுதிதிறனை வளர்த்துக் கொள்வது மிக இலகுவானதாக இருக்கும்.

**பெறுறேுகள்**

01. அரபு பேச்சுத்திறன் இன்மையால் மாணவர்கள் பாரிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

02. அரபு பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் காணப்பட்டாலும் அதற்கான முயற்சிகள் எடுப்பது அரிதாகவே காணப்படுகின்றது.

**பரிந்துரைகள்**

01. அரபு பேச்சுத்திறனின் முக்கியத்துவத்தினை இன்றைய மாணவ சமூதாயத்திற்கு தெளிவு படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

02. பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் விரும்பக்கூடிய வகையில் அரபு பாடத்தை நடாத்தல் வேண்டும்.

உ+ம்: வீடியோக்கள் காட்டல்.

கல்விச் சுற்றுலா செல்லல்.

03. பெற்றோர் தமது பிள்ளைகளிடத்தில் பேச்சுத்திறன் பற்றி கரிசனை எடுத்தல் வேண்டும்.

04. அரபு பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்ளக் கூடிய ஆக்க பூர்வமான கருத்தரங்குகளை பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5. அரபு பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்ளவதற்காக மாணவர்கள் கையாள வேண்டிய வழி முறைகள்

* புதிய சொற்களை மனனம் செய்தல்
* அரபு மொழியிலான பேச்சு, பாடல்கள் மற்றும் உரையாடல்களை செவிமடுத்தல் அல்லது பார்த்தல்.
* அரபு மொழியில் சகபாடிகளுடன் கலந்துரையாடல்.

* அரபு மொழியிலான புத்தகங்களை வாசித்தல்.
* அரபு பேச்சுத்திறனை விருத்தி செய்து கொள்ளக் கூடிய தனியார் வகுப்புகளிற்கு செல்லல்.

6.அரபு பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்ளவதற்காக விரிவுரையாளர்கள் மாணவர்களுக்கு எடுக்க வேண்டிய முயற்சிகள்

* அரபு பேச்சுத்திறனுக்கான தனியான விஷேட பாடவிதானத்தை அறிமுகம் செய்தல்.
* அரச பாடசாலைகளிருந்து தெரிவாகும் மாணவர்களுக்கு விஷேட பயிற்சிகளை வழங்கல் பயிற்சி வகுப்பினை ஒழுங்கு செய்தல்.
* விரிவுரைகளை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் அரபு மொழியில் நடாத்தல்.
* சொல்வளம் மற்றும் இலக்கண அறிவினை விருத்தி செய்தல

உசாத்துணை நூல்கள்

1.القرآن الكريم

2. مجاور، محمد صلاح الدين علي، (1998) ، تدريس اللغة العربية في المرحلة الثانوية. (د.ط)، القاهرة: دار الفكر العربي.

3 .محي الدين, حذيفة, (2017), دراسة تقابلية بين أصوات اللغتين "العربية والسنهالية". رسالة البكاليوريوس, ألوويل: جامعة جنوب شرق سريلانكا, ص.18

4.“The effect of differentiated learning method in teaching Arabic language on student’s motivation”

http://www.reserchgat.net/publication

5.’Enhancing Arabic speaking skills among the Malay students through group works activities’ . http://www.ijhssnet,com

6.A Study of mother tongue influence on learning English as a second language by tamil speaking students.

7.Sahelehkeiabadi ,(2015), Effects mother tongue , language on learning second language learners; Elementary school . International tournal of research in humanities, arts and literature 3(7)81-88.